www.tamilarangam.net

# 1998 பெப்ரவரி 04
# தமிழர் கறுப்பு நாள்

பிரித்தானிய காலனித்துவம் இலங்கைத்தீவின் ஆட்சியுரிமையை சிங்களவர்களிடம் கொடுத்துச் சென்ற 50வது ஆண்டை சிங்கள தேசம் குதூகலமாக கொண்டாடுகின்றது. பெப்ரவரி 04 அன்று சிங்கள அரசு கண்டியில் தன் சிங்கக் கொடியை உயரப்பறக்கவிட்டு தன் 50வது சுதந்திரதினத்திற்கு விழா எடுக்கின்றது. வன்னியில் எம் மழலைகள் பட்டினிச் சாவுடன் அல்லலல்படுகின்றனர்; யாழ் குடாவில் ஒவ்வொரு குடிமனையும் துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்டு சிறையிடப்பட்டுள்ளது; மட்டக்களப்பும் அம்பாறையும் திருமலையும் மன்னாரும் சிங்கள இனவெறிக் கொடுமையின் ஆதாரங்களாக விளங்குகின்றன. தமிழர்களுக்கு இவ் 50 ஆண்டுகள் கொடிய இருள்படர்ந்த நாட்கள். எம் சுதந்திர மூச்சை நசுக்கிவிட எதிரி கையாண்ட வன்முறையின் முழுச்சுமையையும் நாம் சுமந்துவிட்டோம். எமது புதிய தலைமுறை அந்தச் சுதந்திரச் சுடரை அணையாது பாதுகாக்க புலியாக நிற்கையில் சிங்கள தேசத்தின் 50வது ஆண்டு நினைவுநாளை கறுப்பு நாளாக நாங்கள் பிரகடனப்படுத்துகின்றோம்.

**இக் கறுப்பு நாளில்**

அ) நாம், அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் கறுப்புப் பட்டி அல்லது அடையாளங்களுடன் எம் தார்மீகக் கோபத்தை வெளிப்படுத்துவோம்!

ஆ) எமது அனைத்துத் தமிழ் வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டு சமூகத்தின் எதிர்ப்பும் ஒருமைப்பாடும் வெளிப்படட்டும்.

இ) எம்மால் வெளியிடப்படும் துண்டுப்பிரசுரங்களையும் கையேடுகளையும் உங்கள் சக சமூக சினேகிதரிடம் எடுத்துச் சென்று உங்கள் மண்ணில் இடம்பெறும் வேதனைகளை உலகெங்கும் எடுத்துச் செல்லுங்கள்!

# மாபெரும் பேரணி

## இடம் : Place de la Bastille
## காலம் : 04.02.1998 மாலை 2.30

அனைத்துப் புலம்பெயர்ந்துவாழும் தமிழ் மக்களும் இப்பேரணியில் கலந்து கொள்வது கட்டாய கடமையாகும். உங்கள் வேலைத்தளங்களில் விடுமுறை பெறுவதற்கான உத்தியோகபூர்வ கடிதச் சான்றிதழை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(30 தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பான இவ் அமைப்பு கடந்த 27.12.97 அன்று சகல அமைப்புகளினதும் கலந்துரையாடலின்பின் ஏற்றுக்கொண்ட முடிவுகளின் பிரகாரம் மேற்கூறிய ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.)

தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பு

**Fédération des Associations Tamouls - France**

தொடர்புகளுக்கு : 01 40 38 30 74